1987 ஏப்ரல் 24]

(இ) சென்னை புல்லாரெட்டி அவின்யூவிலுள்ள காய்கறிக் கடைகளில் தீ விபத்து

திரு. சோ. மா. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''25-3-1987 அன்று அமைந்தகரை புல்லாரெட்டி அவின்யூவில் காய்கறி கடைகளில் தீவிபத்து ஏற்பட்டது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.''

அறிக்கை.

25-3-1987 அன்று இரவு சுமார் 7 மணியளவில் சென்னை-29 புல்லாரெட்டி அவின்யூ கிழக்கு சாலையில் உள்ள நடைபாதையில் காய்கறி விற்பதற்காக கோணிகளால் கூரை வேயப்பட்ட 11 கடைகள் தீ விபத்தில் சேதம் அடைந்தன. எவ்வித மான உயிர்ச் சேதமும் ஏற்படவில்லை. இத் தீ விபத்து பெட்ரோமாக்ஸ் விளக்கிலிருந்து ஏற்பட்ட தீயினால் ஏற்பட்டது. தீ விபத்தினால் சேதமுற்ற கடைகளில் 3 கடைகள் அச்சம்பவத்தின்போது காலியாக இருந்தன. இத் தீ விபத்தில் குடியிருப்புகள் சேதமடையவில்லை என்பதால் அரசு நிவாரணங்கள் அளிக்கப்படவில்லை.

திரு. சோ. மா. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு மாற்று இடமாக நம்முடைய மாநகராட்சியின் சார்பில் அதை நல்ல கட்டிடமாகக் கட்டிக் கொடுத்தால் இதுபோன்ற விபத்துக்கள் ஏற்படாது என்றும் அதற்காகத் தான் நான் இதைக் குறிப்பிட்டு மாண்புமிகு அமைச்சருடைய கவனத்தை ஈர்த்தேன். மாநகராட்சியின் சார்பில் அவர்களுக்கு ஒதுக்கித் தந்தால் அண்ணா நகர் பகுதியில் உள்ள அத்தனை அண்ணா நகர் வாசிகளும் பசுமையான பொருட்களை வாங்குவதற்கு ஏதுவாக இருக்கும். இப்போது அந்த வாய்ப்பு இல்லாத காரணத்தால் தயவுசெய்து அவர்கள் அதைச் செய்து தருவார்களா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவையின் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே அவர்கள் கட்டியிருந்த இடம் ஆக்கிரமிப்புக்கு உட்பட்ட இடமாக அமைந்திருக்கின்ற காரணத்தால் அந்த இடத்திற்கு, உரிமை

கொண்டாட முடியாது என்றாலும் அவர்களுடைய தொழில் கருதி, வேறு இடத்தில் கடைகளைக் கட்டிக் கொடுக்க வாய்ப்புகள் இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொன்னதைப் போன்று மாநகராட்சித் தலைவரிடத்திலோ, அல்லது மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலோ எடுத்துச் சொல்லி ஒரு குறிப்பிட்ட இடத்தை ஒதுக்கித் தர வாய்ப்பு இருக்குமானால், நாம் கேட்கலாம். அதுபற்றி ஆராயும்படியாகவும் சொல்லலாம்.

(ஈ) சேலத்தில் மருத்துவக் கல்லூரி தொடங்குதல்

*திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. ''சேலம் மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்டும், அந்தக் கல்லூரி இன்னும் சேலத்தில் அமைக்கப்படாதது குறித்தும், அதை விரைவில் அங்கு அமைக்கப்பட வேண்டிய அவசியம் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

18–4–1984 அன்று மருத்துவத் துறைக்கான நிதி ஒதுக்கீட்டினை சட்டமன்றத்தில் தாக்கல் செய்த போது சேலத்தில் புதிதாக மருத்துவக் கல்லூரி ஒன்று துவக்கப்படும் என அப்போதைய நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

2. சேலத்தில் நிலம் கையகப்படுத்தி, தக்க கட்டிடங்கள் கட்டி முடிதது அரசினர் மருத்துவக் கல்லூரியை அங்கு துவங்குவதற்கு நாட்கள் செல்லும். ஆகவே சேலத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காக 1985–86 ஆம் கல்வி ஆண்டு முதலாக 77 மாணவர்கள் எம்.பி.பி.எஸ். பட்டப் படிப்பிற்குத் தேர்வு செய்யப்பட்டு அவர்கள் சென்னை மருத்துவக் கல்லூரியிலும் (26 மாணவர்கள்), ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியிலும் (26 மாணவர்கள்), செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியிலும் (25 மாணவர்கள்) சேர்க்கப்பட்டு கல்வி பயின்று வருகின்றனர். சேலத்தில் கல்லூரி செயல்பட ஆரம்பித்தவுடன் இந்த 77 மாணவர்கள் அங்கு மாற்றப்படுவார்கள்.

3. சேலத்தில் மருத்துவக் கல்லூரி ஏற்படுத்துவதற்காகவே மருத்துவக் கல்வி இயக்குநர் அலுவலகததில் ஒரு தனி அலுவலர் பதவி ஏற்படுத்தப்பட்டு நிரப்பப்பட்டுள்ளது. இததனி